# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2019.07.03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# விடுமுறை நாட்கள் (திருத்தம்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) விஜேதாஸ ராஜபக்ஷ அவர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

*1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தில் 14அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

> “14அ. எவரேனும் ஆள் போயா தினங்களில் அல்லது ஞாயிற்றுக்கிழமை நாட்களில் மாலை 3.00 மணிவரை பாடசாலை மாணவர்களுக்காக ஏதேனும் வளாகத்தினுள் அல்லது ஏதேனும் இடத்தில் மேலதிக வகுப்புகள் நடாத்துதல் அல்லது வகுப்புகள் நடாத்துவதற்கு காரணமாக அமைதல் அல்லது அதற்கு வசதியளித்தல் ஆகாது.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவில், “ஆயிரம் ரூபா” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பத்தாயிரம் ரூபா” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.